குறை கூறி விவாதிப்பது சற்றும் பொருத்தமுடையதல்ல. இது இங்குள்ள எத்தனையோ பேர்களுக்கும் தெரிந்திருக்கும். காரணம், இங்குள்ள எத்தனையோ பேர்கள் ஜெயிலில் இருந்திருக்கிறார்கள். நானும் இருந்திருக்கிறேன். உறுப்பினர் அவர்களும் இருந்திருக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்களும் இருந்திருக்கிறார்கள். மற்ற அமைச்சர்களும் இருந்திருக்கிறார்கள். கைதிகளைச் சென்று பார்ப்பதற்கு என்று சில விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகள் எல்லோருக்கும் பொருந்தும். இங்குள்ளவர்களானாலும், மத்தியில் உள்ளவர்களானாலும் அந்த விதிமுறைகளுக்குட்பட்டேதான் செயல்பட வேண்டும். அதுதான் மரபு. எந்தச் சந்தர்ப்பத்திலும் சில அடிப்படை விதிமுறைகளை யாரும் மீறுதிருப்பதுதான் நல்ல ஜனநாயக அடிப்படைகளை ஏற்படுத்துவதற்கு வழியாக இருக்கும்.

அப்படி இருக்கும்போது இந்தச் சாதாரணப் பிரச்சினைபற்றி குறுக்கீடுகளுக்கு அவசியமில்லை. விளக்கம் கேட்டிருக்க வேண்டியதில்லை. இதுபோன்ற காரியங்களினால் நம் மன்றத்தின் தரம் குறைந்துவிடக் கூடாது என்பதனால் தான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் அவ்வப்போது மன்ற விதிகளை நினைவு படுத்தி வருகின்றேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பற்றி மேலும் விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன். எனவே, இந்தத் தீர்மானத்திற்கு அனுமதி அளிக்க மறுக்கிறேன்.

(4) அரசினர் சட்டமுன்வடிவு.

1972-ம் ஆண்டு சென்னை மாநகர வாடகைக் குடியிருப்போர் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு வருவாய்த் துறை அமைச்சர், 1972-ம் ஆண்டு சென்னை மாநகர வாடகைக் குடியிருப்போர் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருவார்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, 1971-ம் ஆண்டு சென்னை மாநகர வாடகைக் குடியிருப்போர் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, அனுமதி அளிக்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, 1972-ம் ஆண்டு சென்னை மாநகர வாடகைக் குடியிருப்போர் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு பேரவைமுன் அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.